பக்கங்கள் 12
விலை ரூ. 50
Registered as a Newspaper
# உதயன்
சுடர் : 38
கதிர் : 194
வியாழக்கிழமை 08 ஜூன் 2023
வைகாசி 25 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



## தமிழ் மக்களின் நிலையை உலகுக்குக் காட்டும் சம்பவம்

கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8
பொலிஸாரின் விசாரணைகள் தொடர்பில் எமது நம்பிக்கையீனத்தை நீதிமன்றில் சுட்டிக் காட்டினோம். பொலிஸார் மீது சுறப்படும் »11

## பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்த முடியாது

சப்பைக்கட்டு கட்டிய சபாநாயகர்

கொழும்பு, ஜூன் 8
நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னரே »11

## ம.உ. ஆணைக்குழுவிடம் பொலிஸார் வாக்குமூலம்

யாழ்ப்பாணம், ஜூன் 8
வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம் பலத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் இரு பொலிஸ் உத்தியோகத் »11

## எம்.பிக்களுக்கும் இனிமேல் வரி!

கொழும்பு, ஜூன் 8
2024 ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய வரிக்கொள்கையின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வருமான வரி செலுத்துவோர் »10

நேற்றுக்காலை

# கஜேந்திரகுமார் எம்.பி. கொழும்பில் கைது

- நேற்றுமாலையே பிணையில் விடுவிப்பு
- சிறப்புரிமைகளை கருத்தில் எடுக்காத பொலிஸார்
- பல தரப்புகளும் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்காக தயாரான நிலையில், கொழும்பில் வைத்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொலிஸாரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார். நாடாளுமன்ற உறுப்பின ருக்குரிய சிறப்புரிமைகளைச் சுட்டிக்காட்டியபோதும் அவற்றைக் கருத்தில் எடுக்காது பொலிஸார், அவரைப் பொலிஸ் வாகனத்தில் ஏற்றிக் கொழும்பில் இருந்து கிளி நொச்சிக்குக் கொண்டு வந்தனர். »11

## அரசின் எதேச்சதிகாரத்தை எதிர்க்க ஒன்றிணைவோம்!

முன்னாள் எம்.பி. சரவணபவன் அறைகூவல்



யாழ்ப்பாணம், ஜூன் 8
நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைது சட்டவிரோதமானது. அரசாங்கத்தின் எதேச்சதிகார நடவடிக்கைகளுக்கு எதிராக ஒருமித்து அனைவரும் குரல் கொடுப்போம் - இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ் தருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.
நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டமை தொடர்பில் திருகோணமலையில் நேற்று ஊடகங்களுக்குக் »04

## விபத்தில் சிக்கிய இளைஞன் உயிரிழப்பு

யாழ், ஜூன் 8
விபத்தில் படுகாயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த »11

## நகைகள் திருடியவர் மடக்கிப் பிடிப்பு

யாழ், ஜூன் 8
பருத்தித்துறையில் உள்ள வீடொன்றில் இருந்து 5 பவுண் நகைகள் நேற்று திருடப்பட்டிருந்த நிலையில், சந்தேகநபர் உடனடியாகப் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள் »11

## இடைக்கால நிர்வாக சபை விக்கி - தினேஷ் சந்திப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 8
பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுக்கும், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையே இன்று சந்திப்பொன்று நடைபெறவுள்ளது.
வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட்டு, மாகாணங்களுக்கான அதிகாரங்களை மீள வழங்குவது தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட வரைவு தொடர்பாகவே இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது என்று தெரியவருகின்றது. இந்தச் சந்திப்பில் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதல்வர் வரதராஜப் பெருமாளின் செயலாளராகச் செயற்பட்ட கலாநிதி »10

## கிளிநொச்சி, யாழில் சடலங்கள் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 8
யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சியில் ஆண்கள் இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.
அல்வாய், மாவிலங்கடி வீதியில் வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. வியாபாரிமூலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சேதுராமலிங்கம் (வயது - 81) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
வீதியில் வயோதிபர் ஒருவர் வீழ்ந்திருந்ததை அவதானித்த இளைஞர் ஒருவர், »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஜேந்திரகுமாரின் கைது: சிறப்புரிமைப் பிரச்சினை!

## நாடாளுமன்றில் கடும் வாக்குவாதம்

**கொழும்பு, ஜூன் 8**

**நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்ட நிலையில், அவர் கைதுசெய்யப்பட்டமையும் கைதுசெய்யப்பட்ட விதமும் ஏற்புடையது இல்லை என்று நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டின.**

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைதுசெய்யப்பட்டமை தொடர்பில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரைக் கைது செய்யும்போது பின்பற்றவேண்டிய அணுகுமுறைகள் தொடர்பில் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச, 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 3 ஆம் திகதி தெளிவானதொரு தீர்ப்பை வழங்கியுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் சபை அமர்வில் பங்கேற்பதற்கான உரிமை கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு உள்ளது. அவ்வாறு பங்கேற்கவரும்போது அவரைக் கைது செய்யமுடியாது. எனவே, நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவும். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் அரசியல் கொள்கையுடன் எமக்கு உடன்பாடு கிடையாது. அதேபோல நடைபெற்ற சம்பவம் சரியா, தவறா என நாம் கருத்துக்கூற முற்படவில்லை. ஆனால் நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்பதற்கான உரிமை அவருக்கு உள்ளது. அந்தச் சிறப்புரிமை பாதுகாக்கப்படவேண்டும்' - என்றார்.

'நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சபைக்குவரும்போதும், திரும்பும் வழியிலும் அவரைக் கைது செய்ய முடியாது. எனவே, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டமை தவறாகும். தனது பாதுகாப்புக்கென பொலிஸ் அதிகாரிகளையோ அல்லது எம்.எஸ்.டி. (அமைச்சரவை பாதுகாப்புப் பிரிவு) அதிகாரிகளையோ வைத்துக்கொள்ளாத அரசியல்வாதிதான் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். சாரதியுடன்தான் அவர் எல்லா இடங்களுக்கும் செல்கின்றார். அவர் அமைதியான நபர். இங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு ஐந்து, பத்து பேர் இருக்கின்றனர். வடக்கு பகுதி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தும் அவர் பாதுகாப்பு அதிகாரிகளை வைத்து கொள்ளாதவர். சாரதிமட்டுமே உள்ளார். அவரைக் கைது செய்தது தவறு. நாடாளுமன்றம் வரும்போது கைதுசெய்ய முடியாது' என்று லக்ஷ்மன் கிரியெல்ல சுட்டிக்காட்டினார். (ம-44)

# நாடாளுமன்ற உறுப்பினர் கைது அடக்குமுறையின் வெளிப்பாடே

## சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் தெரிவித்துள்ளதாவது-

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இன்றையதினமே (நேற்று) மருதங்கேணிக்குச் சென்று வாக்குமூலம் கொடுக்க வேண்டும் என்று நிர்ப்பந்திப்பதோ, அவரைக் கைது செய்வதோ அவரது நாடாளுமன்றச் சிறப்புரிமையை மீறுகின்ற செயல். நாடாளுமன்ற அமர்வு நடைபெறுகின்ற வேளையில் அதில் கலந்துகொள்வதைத் தடுக்கும் செயல் சட்டவிரோதமானதும் அடக்குமுறையின் வெளிப்பாடும் ஆகும் - என்று பதிவிட்டுள்ளார்.

(எ-22)

# சடலம் மீட்பு!

கிளிநொச்சி, ஜூன் 8

புன்னைநீராவி கிராமஅலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில், கிணற்றுக்குள்ளிருந்து யுவதியொருவரின் சடலம் நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது. பாவலன் பானுசா (வயது - 18) என்ற யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டிலிருந்த யுவதியைக் காணவில்லை என்று தேடியபோதே அவர் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

(ம-113)

## முன்னணி உறுப்பினர்கள் இருவருக்கும் பிணை

கிளிநொச்சி, ஜூன் 8

பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரு உறுப்பினர்களும் நேற்றுப் பிணையில் செல்ல கிளிநொச்சி நீதிமன்றால் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்கள் கடந்த 5ஆம் திகதி மருதங்கேணிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை நேற்றுவரையில் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, அவர்களை நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்தது. கடந்த 3ஆம் திகதி வடமராட்சி கிழக்கு, தாளையடியில் நடாளுமன்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்துகொண்ட சந்திப்பு ஒன்றில் தம்மை அடையாளப்படுத்தாத இருவர் புகைப்படம் எடுத்ததை அடுத்து அவர்களுடன் முரண்பாடு ஏற்பட்டது. அதன்பின்னர் அருகில் இருந்த பரீட்சை நிலையத்தில் கடமையில் இருந்த பொலிஸாரும் அந்த இடத்துக்கு வந்து முரண்பட்டனர். அதன் தொடர்ச்சியாகவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

(அ-எ-113)

# சடலத்தை அடையாளம் காண்க

யாழ்ப்பாணம், ஜூன் 8

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குடன் (வழக்கு இலக்கம் B/ 358/2023 மற்றும் மரண விசாரணை இலக்கம் 57/2023) தொடர்புடைய அடையாளம் காணப்படாத சடலம் யாழ்.போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் யாழ். போதனா மருத்து வமனைப் பணிப்பாளரிடம் தொடர்புகொண்டு சடலத்தை அடையாளம் காட்டுமாறு சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவுறுத்தியுள்ளார்.

(ய)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கஜேந்திரகுமாரின் கைது சிறப்புரிமை மீறும் செயல்

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 8

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நாடாளுமன்றத்தில் மிகவும் வன்மையாகக் கண்டித்தார்.

அவர் சபையில் நேற்று உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரின் கைது நடவடிக்கையானது அவரின் சிறப்புரிமையை மீறிய செயலாகும். ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினருக்கே இந்தக் கதியெனில் வடக்கு, கிழக்கில் வாழும் சாதாரண தமிழ் மக்களின் நிலைமையைச் சிந்தித்துப் பாருங்கள். கொள்கைகள் வேறுபடினும் என்றும் அநீதிக்காக எமது குரல் ஒலிக்கும்-என்றார். (எ-22)

# கஜேந்திரகுமார் கைதுக்கு அரசாங்கமே பொறுப்பு

## சிறீகாந்தா கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் கைதுசெய்யப்பட்டது முற்றிலும் சட்டவிரோதமானதாகும்.

அவர் கைது செய்யப்பட்டதன் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அவரது சிறப்புரிமை அப்பட்டமாக மீறப்பட்டுள்ளது. கஜேந்திரகுமாரின் கைதுக்கு பொலிஸார் பொறுப்பாக இருந்தபோதும், அவர்கள் வெறும் கருவிதான். ஒட்டுமொத்த பொறுப்பும் அரசாங்கத்தினுடையது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாடாளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருடைய சிறப்புரிமையையும் மதிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. கஜேந்திரகுமார் விவகாரத்தில் என்ன நடந்திருக்கின்றது? நாடாளுமன்றத்தில் தங்கிநிற்கும் அரசாங்கம் நாடாளுமன்றத்தை மதிக்காமல் நடந்திருக்கின்றது.

நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ள முடியாமல் ஒரு உறுப்பினர் அரசாங்க உத்தரவின் பெயரில் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கின்றார், கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். இதற்கு பொறுப்பேற்க வேண்டியவர் யார்? பிரதமரா? பாதுகாப்பு அமைச்சரா? ஜனாதிபதியா? அல்லது ஒட்டுமொத்த அமைச்சரவையுமா? நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மீது தொடுக்கப்பட்டிருக்கும் இந்தத் தாக்குதல் தொடர்பில் நிலைமையைச் சீர்செய்வதற்கு நாடாளுமன்ற சபாநாயகருக்கு இப்பொழுதும் காலம் கடந்துவிடவில்லை-என்றார். (எ-இ)

# கஜேந்திரகுமாரின் கைது ஏற்றுக்கொள்ளமுடியாதது

## வி.மணிவண்ணன் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 8

நாடாளுமன்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டமையை யாழ். மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளை நான் சந்தித்தபோது கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு எதிராக சட்டவிரோதமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதைச் சுட்டிக்காட்டியதுடன் இதனைக் கருத்தில் கொள்ளவேண்டும் என வலியுறுத்தியிருந்தேன். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டமை ஏற்றுக்கொள்ள முடியாதது என்று அவர் தெரிவித்துள்ளார்.

(எ-20)

# உண்மை நல்லிணக்க ஆ.குழுவை தமிழர் அமைப்புகள் ஆதரிக்காது!

## நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்சவுக்கு பிரித்தானிய தமிழர் பேரவை பதிலடி

கொழும்பு, ஜூன் 8

**புலம்பெயர் தேசங்களில் இயங்கிவரும் சக்திவாய்ந்த எந்தவொரு தமிழர் அமைப்பும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஆதரிக்காது என்று சுட்டிக்காட்டியுள்ள பிரித்தானிய தமிழர் பேரவை, புலம்பெயர் தமிழர் அமைப்புகளுடன் பேச்சுக்களை நடத்தி அவற்றின் ஆதரவைப் பெற்றுவிட்டதாகக் கூறுகின்ற அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச அந்த அமைப்புக்களின் விபரங்களைப் பகிரங்கப்படுத்தவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் பிரித்தானியத் தமிழர் பேரவை மேலும் தெரிவித்ததாவது:

பிரித்தானிய தமிழர் பேரவை உள்ளடங்கலாகப் புலம்பெயர் தேசங்களில் இயங்கிவரும் பெரும்பாலான தமிழர் அமைப்புகள், இலங்கையில் வாழும் ஒடுக்கப்பட்ட மற்றும் உள்நாட்டுப்போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன.

அதன்படி சர்வதேச நீதி விசாரணைப்பொறிமுறையை நோக்கிய எமது முயற்சிகளை முறியடிக்கும் நோக்கிலேயே இலங்கை அரசாங்கம் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

அதேவேளை பாதிக்கப்பட்ட தரப்பினருடன் நெருங்கிப்பணியாற்றிவருகின்ற, புலம்பெயர் தேசங்களில் இயங்கிவரும் சக்திவாய்ந்த எந்தவொரு தமிழர் அமைப்பும் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஆதரிக்காது.

எனவே புலம்பெயர் தமிழர் அமைப்புகளுடன் பேச்சுக்களை நடத்தி ஆதரவைப் பெற்றுவிட்டதாகக் கூறுகின்ற அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச அந்த அமைப்புகளின் விபரங்களைப் பகிரங்கப்படுத்தவேண்டும் - என [illegible]றுள்ளது. ([illegible])

# முறைகேட்டை மறைக்க ஊடக ஒடுக்குமுறைகள்

## கிளிநொச்சி பிரஜைகள் குழு காட்டம்

கிளிநொச்சி, ஜூன் 8

போர்க்காலத்தில் ஊடகங்களைக் கட்டுப்படுத்திய அரசாங்கம், தற்போது ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டவரைவைக் கொண்டுவந்து மீண்டும் ஊடக சுதந்திரத்தை நசுக்க முயல்கின்றது. தமது முறைகேடான செயற்பாடுகளை புடம்போட்டுக் காட்டுவதை சர்வாதிகாரக் கரங்களால் அடக்க முற்படுகிறது -இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட பிரஜைகள் குழுவின் செயலாளர் சிங்கராசா ஜீவநாயகம் தெரிவித்துள்ளார்.

ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டவரைவு தொடர்பில் கருத்துத் தெரிவிப்பதற்காக நேற்றுமுன்தினம் ஒழுங்குசெய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர்க்காலத்தில் செய்தித் தணிக்கைகளை அரசாங்கம் செய்திருந்தது. அதனால் போர்க்காலத்திலும் சரி இறுதிப்போரிலும் சரி நிகழ்த்தப்பட்ட மனிதப் பேரவலங்களை ஊடகங்களால் வெளியிலே கொண்டுவரமுடியாத நிலை ஏற்பட்டது. காவுகொள்ளப்பட்ட உயிரிழப்புகள் தொடர்பாகவோ இனப்படுகொலை தொடர்பிலோ இன்றுவரை விடைகாண முடியாத நிலை காணப்படுகிறது.

நாட்டில் சிறந்த ஆட்சியை வலியுறுத்துவதில் ஊடகங்களின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கின்றது. ஜனநாயகத்தின் நான்காவது தூணாக ஊடகத்துறை கருதப்படுகிறது.

இந்தநிலையில் ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டவரைவை அரசாங்கம், இந்த ஆட்சியின் குறைபாடுகள், நீதி தவறிய முறைகேடான செயற்பாடுகளை மூடிமறைக்கும் கருவியாகப் பயன்படுத்துகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெயரளவில் மாத்திரமே ஜனநாயகத்தை பாதுகாப்பார். மறைமுகமான வகையில் ஜனநாயகத்துக்கு எதிராகவே செயற்படுகிறார்.

அதிகார வெறிபிடித்த அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாட்டை அனைவரும் இணைந்து சட்டச் சவாலுக்குட்படுத்தி தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் - என்றார்.

(ச-113)

## ஜி.எஸ்.பி. நீக்கப்பட்டால் 494 மில். டொலர் இழப்பு

கொழும்பு, ஜூன் 8

ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கான ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை நீடிக்காவிட்டால் இலங்கைக்கு 494 மில்லியன் டொலர் இழப்பு ஏற்படுமென ஆடைக்கைத்தொழில்துறை சங்கத்தின் செயலாளர் நாயகம் யொஹான் லோறன்ஸ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐரோப்பிய ஒன்றியம் வழங்கிய ஜி.எஸ்.பி. வரிச்சலுகை 2023ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் முடிவடைகிறது. ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை நீடிக்காவிட்டால் இலங்கைக்கு 494 மில்லியன் டொலர் நட்டம் ஏற்படும். இலங்கையின் ஏற்றுமதித்துறையில் ஆடைக்கைத்தொழில் ஏற்றுமதி 79 வீதம் பங்கு வகிக்கிறது.

2023ஆம் ஆண்டு மார்ச் வரையான காலப்பகுதியில் ஆடைக்கைத்தொழில் துறைக்கு ஒரு பில்லியன் டொலர் இழப்பு ஏற்பட்டுள்ளது. இது 2013ஆம் ஆண்டின் பின்னர் ஏற்பட்ட மோசமான இழப்பு - என்றார். (ம)

# குரங்குக் காய்ச்சல்: இருவர் பாதிப்பு!

கொழும்பு, ஜூன் 8

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவருக்கு குரங்குக் காய்ச்சல் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டிலிருந்து இலங்கை வந்த நிலையில் அவர்களுக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. டுபாயிலிருந்து வருகை தந்த தாய் மற்றும் மகள் ஆகியோருக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்கள் தற்போது தொற்றுநோய் மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்தார். (ம)




இஞ்சையுள்ள கோயில்களெல்லாம் கொடியேறத் தொடங்கிட்டுது. இன்னும் ரண்டு மூண்டு மாசத்துக்கு ஒரே கொண்டாட்டம் தான். பொதுவா ஏதும் திருவிழாவோ, கொண்டாட்டமோ நடந்தால் அந்த இடத்தை எவ்வளவுத்துக்கு குப்பையாக்க ஏலுமோ அந்தளவுக்கு குப்பையாக்கிப் போட்டுப் போறதில எங்கட ஆக்களுக்கு அலாதிப்பிரியம். இப்பிடியான நிகழ்வு நடந்த இடங்களை அடுத்தநாள் போய்ப்பார்த்தால், அந்த இடம் முழுக்க சொப்பிங் பையும், தண்ணிப் போத்திலும், கச்சான் கோதும், வண்டே கப்பும் எண்டு மண்டிப்போய்க் கிடக்கும். அதைக் கூட்டி அள்ளி துப்புரவாக்கவே நாலைஞ்சு நாள் வேணும். குளிக்கப் போன கிணத்துக்க சேறை அள்ளிப் போடுற மாதிரி கும்பிடப் போன இடங்களையும் குப்பையாக்கிப்போட்டுத்தான் வருவம். அதுதான் எங்கட பரம்பரைப் பழக்கம்.

போன திங்கட்கிழமை வற்றாப்பளை அம்மனுக்குப் பொங்கல் நடந்தது. வழக்கத்தைவிட இந்தமுறை அள்ளுகொள்ளையான சனம். பொங்கலுக்கு வாற சனங்கள் போடுற பிளாஸ்ரிக் போத்தில், லஞ்ச் சீற், லஞ்ச் பொக்ஸ், ஐஸ்கிறீம் கப் எல்லாம் அப்பிடியே காத்தோட அள்ளுப்பட்டுக் கொண்டு போய் நந்திக்கடலில போய் கலந்து. அதையும் குப்பையாக்கிப் போடும். அப்பிடி இந்தமுறையும் நடக்கக்கூடாது எண்டதுக்காக கோயிலுக்கும் கடலுக்கும் இடையில வலையால ஒரு வேலி போட்டவை. வற்றாப்பளை மாட்டுவண்டில் சவாரிச் சங்கம் தான் சமூக அக்கறையோட இப்பிடியொரு நல்ல வேலையைச் செய்தது. அதால இந்தமுறை சனம் கூட எண்டாலும், பிளாஸ்ரிக் குப்பையள் மலை மாதிரி குவிஞ்சாலும் கடலுக்க போய் கலக்கேலை. இல்லாட்டி கோயில் வீதியைக் கஞ்சலாக்கின மாதிரி கடலையும் உந்தக் குப்பையள் நாசமாக்கியிருக்கும். ஒவ்வொரு வருசமும் இப்பிடி வலை வேலி போடுறதை வற்றாப்பளைக் கோயில்காரர் கட்டாயமாக்க வேணும்.

அதைவிட இன்னொரு விசயத்தையும் எல்லாக் கோயில்காரரும் கட்டாயம் இறுக்கமாக் கடைப்பிடிக்கோணும். கோயில் வீதியளில செருப்போட போனால் 'அண்ணை செருப்பைக் கழட்டி கையில கொண்டு போங்கோ' எண்டு சொல்லுறதுக்கு தொண்டர் படையை வைச்சிருக்கிறமாதிரி, இப்பிடி கோயில் வீதியை பிளாஸ்ரிக் குப்பை மேடாக்கிற ஆக்களையும், பக்கத்தில உள்ள குப்பைத்தொட்டிக்குள்ள அதுகளைப் போடுங்கோ எண்டு சொல்லிச் செய்விக்க வேணும். அப்பிடியும் வீம்புக்கு கோயில் வீதியை குப்பையாக்குவம் எண்டு ஒற்றைக்காலில நிக்கிறவைக்கு, அந்த இடத்திலேயே 'பைன்' அடிச்சு, அதால வாற காசை கோயில் திருப்பணிக்கு எடுக்கலாம். அநேகமா, கடையளைக் குத்தகைக்கு விடுகிறதால வாற காசை விட, இப்பிடி குப்பை போடுறவையால வாற காசுதான் கூடவா இருக்கும். இப்பிடிச் செய்தால்தான், எங்கட ஆக்களுக்கும் குப்பைக்கூடை எண்டு ஒரு சாமான் இருக்கிறதும், அதுக்க தான் உந்தக் கழிவுகளைப் போடோணும் எண்ட அறிவும் வரும். இல்லாட்டிக் காலம் முழுக்க கோயில் திருவிழாவும், பிளாஸ்ரிக் குப்பை மேடும் ஒட்டிப்பிறந்த ரட்டைப் பிள்ளையள் போல பிரிக்கேலாமல் போடும்.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிளாஸ்ரிக் வேண்டாம் மக்களிடம் பரப்புரை!



**யாழ்ப்பாணம், ஜூன் 8**
**'பிளாஸ்ரிக் மூலம் ஏற்படக்கூடிய மாசைத் தடுப்போம்' எனும் தொனிப் பொருளின் கீழ், வலிகாமம் வடக்குப் பிரதேசசபையினரால் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.**

ஜூன் மாதம் 5ஆம் திகதி உலக சுற்றுச்சூழல் தினம் நாடெங்கிலும் பரவலாகக் கடைப்பிடிக்கப்பட்டது. இதை முன்னிட்டே மேற்படி விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

நிகழ்வில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். இதன்போது நீர், நிலம், வளி போன்ற இயற்கை மூலாதாரங்கள் மாசடைவதனால் ஏற்படும் தீமைகள் தொடர்பாகவும் அவற்றைப் பாதுகாப்பதற்கான வழிவகைகள் தொடர்பாகவும் பிளாஸ்ரிக் கழிவுகளால் ஏற்படும் தீமைகள் மற்றும் பிளாஸ்ரிக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாகவும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. (ம)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 8
யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் தேசிய தொழில் தகமை மட்டம் 5 இன் I,II,IIIஆம் எழுத்துப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
எனவே பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்கள் விண்ணப்பப்படிவங்களை தொழில்நுட்பவியல் கல்லூரியின் பரீட்சைப் பிரிவில் பெற்று, விண்ணப்பத்தை 19ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ய)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 8
சாகித்ய ரத்னா தெணியானின் முதலாம் ஆண்டு சிராத்ததின நிகழ்வும், உருவச்சிலை திறப்பும், 'ஒடுக்கப்பட்ட மக்களின் குரல் தெணியான்' நூல் வெளியீடும் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொற்றாவத்தையில் நடைபெறவுள்ளது.
யாழ். மாநகரசபை ஆணையாளரும் கவிஞருமாகிய இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், தலைமையுரையையும் உருவச்சிலை திறப்புரையையும் மல்லாகம் நீதிமன்றத்தின் பதில் நீதிவான் சோ.தேவராஜாவும், நூல் வெளியீட்டுரையையும் கருத்துரையையும் எழுத்தாளர் மு.அநாதரட்சகனும், தெணியான் பற்றிய நினைவுப் பகிர்வுகளை கலாநிதி ந.ரவீந்திரன் மற்றும் சட்டத்தரணி தே.ரெங்கன் ஆகியோரும், நன்றியுரையை க.பரணீதரனும் ஆற்றவுள்ளனர். (ய)

## சங்கிலிய மன்னன் சிரார்த்ததின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 8
யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசிச் சைவத்தமிழ் மன்னன் 2ஆம் சங்கிலியனின் 404 ஆவது சிரார்த்ததின நிகழ்வு எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.
நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள சங்கிலிய மன்னனின் சிலையடியில் காலை 9 மணியளவில் நினைவுகூரப்படவுள்ளது. சங்கிலிய மன்னனின் நினைவுக்குழுவின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படவுள்ளது. (ச-66)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 8
அகில இலங்கை இந்து மாமன்றம், ஆறுபடை வீடு, முருகப்பெருமான் திருப்பீடம் மற்றும் இந்து மாமன்ற வன்னி அலுவலகம் என்பன இணைந்த வகையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளன.
இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் மா.தவயோகராஜா தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், முதன்மை விருந்தினராக நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கலந்துகொள்ளவுள்ளார். (ய)

## குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 8
வண்ணார்பண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட சமயக் குரவர் நால்வர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 7.25 மணிக்கு ஆரம்பமாகி, தொடர்ந்து 12 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும் என ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (ய)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

பிறப்பு
22 . 10 . 1987



இறப்பு
07 . 06 . 2023

**திரு. ஜெயசேகரசிங்கம் திலேந்திரன்**

அல்வாய் வீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.ஜெயசேகரசிங்கம் திலேந்திரன் நேற்று (07.06.2023) புதன்கிழமை அகாலமரணமடைந்துவிட்டார்.

அன்னார் ஜெயசேகரசிங்கம் சசிகலாதேவியின் அன்பு மகனும், புஷ்பவேலு பிறேமாவதியின் அன்பு மருமகனும், பிரியதர்சினியின் பாசமிகு கணவரும், உமேஷ், நர்மதா, அபிரானு ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மோகனரூபி, முரளிகரன், நிவேதா, ஜெகதீபன், பிரதீபன், கேதீஸ்வரன், பிரதீபா ஆகியோரின் அன்பு மைத்துனரும், யஸ்விதா, நேகா, சஷ்மிதன் ஆகியோரின் சித்தப்பாவும், சர்மிகா, சஜீஸ்விகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2023) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அல்வாய் வீதி,**
**உடுப்பிட்டி.**

தகவல் :
குடும்பத்தினர்.
**077 357 8330**


## சிலை திறப்பு

*சாவகச்சேரி, ஜூன் 8*
*சாவகச்சேரி தேவாலய வீதியில் அமைந்துள்ள ரீ.பீ.ஹன்ட் ஓவியக்கூட முன்றிலில் நிர்மாணிக்கப்பட்ட நில அளவையாளர் ரீ.பீ.ஹன்ட் உருவச்சிலை எதிர்வரும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.*
*இந்த நிகழ்வானது ஓவியக்கூட நிறுவுநர் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்த உருவச்சிலையை தென்னிந்தியத் திருச்சபை யின் யாழ். மாவட்டப் பேராயர் திறந்து வைக்கவுள்ளார். (ரி2-9)*

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குள்ள சிறப்புரிமை களை மீறி நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டுள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலைமை, சாதாரண பொதுமக்கள் எவ்வாறு நடத்தப் படுவார்கள் என்பதை வெளிப்படுத்துகின்றது.
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கென சிறப்புரிமை இருக்கின்றது. ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை பொலிஸார் கையாண்ட விதம் தவறானது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் என்பதாலா பொலிஸார் இவ்விதம் செயற்பட்டிருக்கிறார்கள்?
வெவ்வேறு கட்சிகளாக இருந்தாலும் இவ்வாறான சட்டவிரோத நடவடிக்கைகளை நாம் வேடிக்கை பார்க்க முடியாது. இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராகக் கிளர்ந்தெழ வேண்டியது அனைவரது கடமையாகும்.
பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் என்பன தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அரசாங்கம் கூறுகின்றது. நல்லிணக்கம் தொடர்பில் பேசப்படுகின்றது. ஆனால், அவை அனைத்தும் பேச்சிலேயே இருக்கின்றன.
இன நல்லிணக்கம் தொடர்பாகவும், சமூகங்கள் ஒன்றிணைந்து நாட்டை முன்னேற்றவேண்டும் என்றும் கூறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் சிறப்புரிமை மீறப்படும்போது தலையிட்டிருக்கவேண்டும். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாகுபாட்டுடன் நடத்தப்படும் போது அதைத் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும்.
நாட்டில் சமூகங்களுக்கிடையே ஒற்றுமை ஏற்படவேண்டு மனால் இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்தவேண்டும். பொலிஸாரின் இவ்வாறான செயற்பாடுகள் மக்களை அவர்களிடத்தில் இருந்து விலக வைக்கும். பெரும்பான்மையினத்தவர்கள் மீதான நம்பிக்கையின்மையை உருவாக்கும். ஒருபோதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது - என்றார். (அ-எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஒரு கைதும் - கையறு நிலையும்

நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்றுக்காலை பொலிஸாரால், நாடாளுமன்ற சிறப்புரிமைகளுக்கு முரணாகக் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். நாடாளுமன்ற அமர்வுக்குச் செல்வதற்காக அவர், நேற்றையதினம் தயாராகிக் கொண்டிருந்தபோது, ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு வகுக்கப்பட்டிருக்கும் சிறப்புரிமை நியாயாதிக்கங்களை மீறிய வகையில் அரசமைப்புக்கு முரணாக இந்தக் கைது நடவடிக்கை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. அரசியல் பேதங்களுக்கும் கருத்து முரண்பாடுகளுக்கும் அப்பால், இந்தக் கைது 'தமிழ்த் தேசியத்தை மையப்படுத்தியதான ஒரு பொதுப்பிரச்சினையாகவே' அணுகப்பட வேண்டியிருக்கின்றது.

மருதங்கேணியில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினருக்கும் பொலிஸாருக்கும் இடையில் கடந்த இரண்டாம் திகதி ஏற்பட்ட முறுகல்களைத் தொடர்ந்து பொலிஸார் முன்னணியினர் மீதும், முன்னணியினர் பொலிஸார் மீதும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டியிருந்தனர். இந்த விவகாரத்துடன் தொடர்புடைய சிலர் ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட நிலையில், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தையும் கைதுசெய்வதற்கான முயற்சிகள் கடந்த இரு தினங்களாகவே பொலிஸாரால் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. இந்த விவகாரத்தில் வாக்குமூலம் வழங்குவதற்காக வருமாறு மருதங்கேணி பொலிஸார் விடுத்த அழைப்பை ஓர் இடத்திலேனும் கஜேந்திரகுமார் மறுதலிக்கவில்லை. 'சபாநாயகரின் அறுவுறுத்தலுக்கு அமைய, நாடாளுமன்ற அமர்வுகள் நிறைவுற்றதும் வாக்குமூலம் வழங்குவேன்' என்றுதான் அவர் தெரிவித்திருந்தார். வாக்குமூலம் வழங்காமல் ஓடி ஒளிக்கவோ, நாட்டை விட்டுத் தப்பி ஓடவோ அவர் முயலவில்லை. ஆனால், கஜேந்திரகுமார் அதிபயங்கரமான குற்றமொன்றைச் செய்துவிட்டு, தப்பிக்க முனைவது போன்ற தோரணையில் நாட்டைவிட்டு வெளியேற முடியாதவாறு தடையுத்தரவையும் பொலிஸார் நீதிமன்றில் பெற்றிருந்தனர். அப்படியும் பொலிஸாரின் வன்மம் அடங்கவில்லை. நாடாளுமன்ற அமர்வுக்காக புறப்பட்டுக் கொண்டிருந்த கஜேந்திரகுமாரை நேற்றுக்காலை கைது செய்து, உடனடியாகவே அவரை கிளிநொச்சிக்கும் கொண்டுவந்து வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

நாடாளுமன்ற அமர்வொன்றுக்காகச் சென்ற இடத்தில், அரசமைப்பால் குறித்தொதுக்கப்பட்ட சிறப்புரிமைகளை மீறிய வகையில், நாட்டை விட்டு வெளியேறுவதற்குத் தடைகளையும் பெற்ற பின்னரும் கூட, கஜேந்திரகுமாரைக் கைது செய்வதற்கு பொலிஸார் காட்டிய அதீத ஆர்வம் தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழாமலில்லை. ஆனால், இந்த அதீத முனைப்பில் பாதியையாவது இந்த நாட்டில் புரையோடிப் போயிருக்கும் இதர குற்றங்கள் மட்டில் பொலிஸார் காண்பிக்கின்றனரா? என்ற நியாயமான கேள்வியையும் நாம் கேட்கத்தான் வேண்டியிருக்கின்றது.

பல கோடி ரூபா மதிப்பிலான பெருந்தொகை தங்கத்தையும், கைபேசிகளையும் சட்டவிரோதமாக டுபாயிலிருந்து கடத்திவந்த நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் அண்மையில் சுங்கத்திணைக்களத்தினரால் விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டார். கடந்த ஒரு மாதத்துக்குள் ஆறு தடவைகள் அவர் இவ்வாறு வெளிநாடுகளுக்குச் சென்று வந்தமையும் அம்பலமாகியிருந்தது. எனினும், அவருக்குக்கூட வெளிநாட்டுக்குச் செல்வதற்கான பயணத்தடை விதிக்கப்படவில்லை. தங்கக் கடத்தல் குற்றத்துக்காக தண்டப்பணம் கட்டிய உடனேயே வெளியே வந்த அவர் ஓரிரு நாள்களில் மீண்டும் டுபாய்க்கு பயணமானார். வெளிநாட்டுக்குச் சென்று கடத்தலில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்குக் கூட விதிக்கப்படாத 'வெளிநாட்டுப் பயணத்தடை' தமிழர் என்ற காரணத்துக்காகத்தான் கஜேந்திரகுமாருக்கு விதிக்கப்பட்டதா? என்ற கேள்வியும் எழாமலில்லை. கஜேந்திரகுமாரைக் கைது செய்வதில் மும்முரமாகச் செயற்பட்ட இதே மருதங்கேணிப் பொலிஸ் நிலைய ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் தான் கசிப்பு விற்பனையும், சமூக விரோதச் செயல்களும் மணல் கடத்தல்களும் அமோகமாக நடந்தேறிவருகின்றன. அத்தகைய குற்றங்களைத் தடுக்கவோ, குற்றவாளிகளைப் பிடிக்கவோ சுண்டுவிரலைக் கூட அசைக்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் பொலிஸாருக்கு கஜேந்திரகுமாரைக் கைது செய்வதில் மட்டும் திடீர் உசார் வந்திருக்கிறது.

தமிழ் இனத்தில் பிறந்துவிட்டால், ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் கூட, சிறப்புரிமைகள் இருந்தாலும் கூட, தாம் நினைத்தபடி துப்பாக்கியாலும் அச்சுறுத்துவோம், எதிர்ப்புக் காட்டினால் கைதும் செய்வோம் என்பதையே இந்த நடவடிக்கை மூலம் அரசாங்கம் சொல்ல எத்தனிக்கிறது. ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கே இந்தக்கதி என்றால் சாதாரண அப்பாவித் தமிழ் மக்களை இந்த அரசாங்கமும், அதன் அதிகார இயந்திரங்களும் எப்படிப் பந்தாடும்? இதுதான் இலங்கையின் நல்லிணக்கம் போலும்.

## நாளொரு நல்வார்த்தை

"உங்களுக்கு என்ன நடக்கிறது என்பது பெரிய விடயமல்ல, அதற்கான உங்களின் நடவடிக்கை என்ன என்பதே முக்கியம்"

– எபிக்டீடஸ்




# ஜனாதிபதித்தேர்தலை முடிந்தால் நடத்துங்கள்

## அரசாங்கத்துக்கு சஜித் சவால்

**கொழும்பு, ஜூன் 8**

**நாடாளுமன்றத் தேர்தலை நடத்தாவிடின், முடிந்தால் ஜனாதிபதித் தேர்தலை நடத்துங்கள் என்று அரசாங்கத்துக்குச் சவால் விடுத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவரான சஜித்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரவு - செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட போதிலும், பணமில்லை எனக் கூறி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டாலும், சுற்றறிக்கைகள் மூலம் அரசியல் கைக்கூலிகளை நியமித்து உள்ளூராட்சிமன்றங்களை தமக்கு விருப்பமானவாறு கட்டுப்படுத்த அரசாங்கம் முயற்சித்து வருகிறது. இந்தச் சுற்றறிக்கையின் மூலம், உள்ளூராட்சிமன்றங்களின் பணிகளை ஒருங்கிணைக்க, ஒருங்கிணைப்பாளர் ஒருவரை நியமிக்க, ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் புதிய சபைகளை ஏற்படுத்தாமல் அரசியல் அடியாள்கள் மூலம் உள்ளூராட்சி மன்றங்களைக் கட்டுப்படுத்தத் தற்போதைய அரசாங்கம் செயற்பட்டு வருகிறது. அரசாங்கத்தின் இந்த நடவடிக்கையை நாங்கள் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம். அத்துடன், நீதித்துறைசாரார்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி, மக்கள் தேர்தலை விரும்பவில்லை எனவும், நாடாளுமன்றத்தில் எந்தக் கட்சிக்கும் 50 சதவீத பெரும்பான்மை இல்லை எனவும் தெரிவித்திருந்தார். 50 வீத பெரும்பான்மை இருக்கிறதா? இல்லையா? எனப் பார்ப்பதற்கு தேர்தலை நடத்துமாறு பிரதமரை கேட்டுக்கொள்கிறேன். உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த முடியா விட்டால், முடிந்தால் ஜனாதிபதித் தேர்தலை நடத்துங்கள். அதற்குத் தேவையான பெரும்பான்மையை நாங்கள் நாடாளுமன்றத்தில் பெற்றுத்தரத் தயாராக இருக்கின்றோம் - என்றார். (ம)

# இரு மடங்கு ஆசிரியர்களின் ஓய்வே நெருக்கடிகளுக்கு பிரதான காரணம்

ஓய்வு பெற்றுச்செல்லும் ஆசிரியர்களின் எண்ணிக்கை கடந்த காலங்களில் ஒரு வருடத்துக்கு ஐயாயிரம் அல்லது ஆறாயிரம் ஆகவே இருந்து வந்திருக்கிறது. ஆனால் கடந்த வருடம் அது இரண்டு மடங்காகியுள்ளமையே ஆசிரியர்கள் பற்றாக்குறைக்கு முக்கியமான காரணமாகும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

ஆசிரிய நெருக்கடிகளைத் தவிர்க்கும் வகையில், எதிர்வரும் 16 ஆம் திகதி கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறியுள்ள 7 ஆயிரத்து 500 பேருக்கு தேசிய பாடசாலை மற்றும் மாகாண மட்டப் பாடசாலைகளுக்காக ஆசிரியர் நியமனங்களை வழங்கவுள்ளோம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம)

**நாளை**

**09.06.2023**
**வெள்ளிக்கிழமை**
**வைகாசி 26**

சுபநேரம் : 05.52 - 07.22
ராகுகாலம் : 10.22 - 11.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரணதரப் பரீட்சை 3 முறைகேடுகள் பதிவு

நடைபெற்று வரும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை தொடர்பில் 3 மோசடிச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். பிபிலை - வெல்லஸ்ஸ பகுதியிலுள்ள பரீட்சை மத்திய நிலையமொன்றில் வினாப்பத்திரத்தை ஆசிரியருக்கு அனுப்பி 'வட்ஸ் அப்' ஊடாக விடைகளை மாணவர் பெற்றுக்கொண்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதேபோல் ஹேனேகம பகுதியிலுள்ள பரீட்சை மத்திய நிலையமொன்றில் இரு பரீட்சார்த்திகள் கணித வினாப்பத்திரத்தை அலைபேசியூடாக ஆசிரியர்களுக்கு அனுப்பி விடைபெற்றுக்கொண்ட போது கண்காணிப்பாளரிடம் சிக்கினர். சீதுவை பிரதேசத்திலும் வினாத்தாள்களை சமூக ஊடகங்களில் பகிர்ந்துகொண்ட ஐந்து பேர் பிடிபட்டுள்ளனர். முறைகேடுகளுடன் தொடர்புடைய பரீட்சார்த்திகள் மற்றும் அவர்களுக்கு உதவிய ஆசிரியர்களுக்கு எதிராக கடுமையாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(ச-6)

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் பகிரங்க ஏல விற்பனை

வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தரம்பிரித்தல் நிலையம் நீர்வேலியில் தரம்பிரிக்கப்பட்ட இரும்பு, செப்பு, பித்தளை, கண்ணாடிப் போத்தல்கள், பிளாஸ்ரிக் பொருட்கள், சேதனப் பசளை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளன.

**காலம் :- 14.06.2023 புதன்கிழமை**
**காலை 09.00 மணி**
**இடம் :- தரம்பிரித்தல் நிலையம் நீர்வேலி.**

**நிபந்தனைகள்**

01. ஏலதாரராக கலந்து கொள்பவர் ரூபா 5000.00 மீளளிக்கக் கூடிய வைப்புப் பணமாக செலுத்தி ஏல விற்பனையில் பங்குபற்றலாம்.
02. சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே தங்களால் கோரப்பட்ட ஏலத்தொகையின் முழுத் தொகையையும் செலுத்தி பொருட்களை தரம்பிரிக்கும் நிலையத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.
03. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,**
**புத்தூர்.**
**07.06.2023**

**தொடர்பு இலக்கம்**
**021 205 8867**

## மரண அறிவித்தல்



### சண்முகநாதன் யோகேந்திரன் (யோகன்)

**தோற்றம்** 01.08.1969 — **மறைவு** 04.06.2023

காலம்சென்ற தணிகாசலம் சண்முகநாதன் (ஐயனார் கோவிலடி, யாழ்ப்பாணம்) மற்றும் மயில்வாகனம் இந்திரா (வல்வெட்டி, தற்போது கனடா) ஆகியோரின் அன்பு மகன் யோகேந்திரன் (யோகன்) 04.06.2023 கனடாவில் காலமானார்.

இவர் வீரமாணிக்கதேவன்துறை, மயிலிட்டியை வசிப்பிடமாகக் கொண்டிருந்த காலம்சென்றவர்களான இளையதம்பி நவமணி ஐயா, சிவகுரு நீலாயதாட்சியம்மா (நீலா) ஆகியோரின் அன்பு மருமகனும் நிருதிகா (சுதா)வின் அன்புக் கணவரும் நிரோஜன் சாம்பவி, சகானா ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேந்திரன் (கொழும்பு), விஜயேந்திரன் (கனடா) ஆகியோரின் ஆசைத் தம்பியுமாவார்.

யோகனின் பூதவுடல் இறுதியஞ்சலிக்காக Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Avenue, Markham, ON, L3R 5G1 என்ற இடத்தில் சனிக்கிழமை ஜூன் மாதம் 10ஆம் திகதி மாலை 5.00 மணிதொடக்கம் 9.00 மணிவரையும், ஞாயிற்றுக்கிழமை 11ஆம் திகதி காலை 7.00 மணிமுதல் காலை 8.30 மணிவரையும் வைக்கப்பட்டுத் தொடர்ந்து இறுதிக்கிரியைகள் அதேயிடத்தில் காலை 8.30 மணிமுதல் 10.00 மணிவரையும் நடைபெற்றும். அதனைத் தொடர்ந்து Highland Hills Crematorium, 12492 Woodbine Avenue, Gormley, ON, L0H 1G0 இல் ஞாயிற்றுக் கிழமை 11ஆம் திகதி காலை 10.30 மணிக்கு தகனம் செயயப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்களனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**மனைவி - சுதா யோகன்** 647 631 9698
**சகோதரன் - சுரேன்** 077 309 4639
**சகோதரன் - விஜி** 647 631 9698
**மைத்துனன் - தவச்சந்திரன் (தவா)** 416 829 7181
**மைத்துனி - கலாநந்தினி குமாரசாமி** 074 072 4891
**மைத்துனி - நிவேதிதா பாஸ்கரன்** 077 874 2055

**வீரமாணிக்கதேவன்துறை,**
**மயிலிட்டி**

(CS/50735)AH-1

**தகவல் :**
**குடும்பத்தினர்**

## கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த வேள்விப் பொங்கல் - 2023

கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயத்தின் வருடாந்த மரபுவழி வேள்விப் பொங்கல் உற்சவமானது எதிர்வரும் 10.06.2023 சனிக்கிழமை ஆலயத்தில் சிறப்பாக நடைபெறவுள்ளது. அதிகாலை 4.00 மணியளவில் பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி 4.30 மணியளவில் கடாய்கள் மற்றும் சேவல்கள் ஆகியன காணிக்கையாக்கப்படும். அத்துடன் எதிர்வரும் 16.06.2023 வெள்ளிக்கிழமை மாலை எட்டாம்மடை உற்சவத்துக்கான பொங்கல்கள் மற்றும் பூஜைகளும் நடைபெறவுள்ளது.

**தர்மகர்த்தா - சி. புஸ்பராசா**

## கண்ணீர் அஞ்சலி



ஆலய பரிபாலன சபையின் முன்னாள் தலைவரும், நீண்டகால பரிபாலனசபை உறுப்பினரும், ஆலய மணி மண்டபத்தை பாரிய நிதியில் நிர்மாணித்து கொடுத்துவரும், திருப்பணிகளுக்கு வேண்டிய நேரங்களில் நிதிப்பங்களிப்பு செய்தவரும் தேர், தீர்த்தத்திருவிழா உபயகாரர்களில் ஒருவருமாகிய **அமரர் இராமலிங்கம் இராஜேந்திரன் (சம்பந்தன்)** அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா பெருங்குளம் முத்துமாரி அம்மனின் பாதார விந்தங்களை அடைவதற்கு பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**தோற்றம்: 20.11.1953**
**மறைவு: 06.06.2023**

**பிரிவின் துயரில்:**
**பரிபாலனசபை, திருப்பணிச்சபை**
**வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் கோவில்.**

## மரண அறிவித்தல்

**தோற்றம்** 26 - 01 - 1967



**மறைவு** 06 - 06 - 2023

### நாகமுத்து குகதாசன்

புதுறோட் காரைநகரை பிறப்பிடமாகவும் குச்சம் ஒழுங்கை வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து குகதாசன் நேற்றுமுன்தினம் (06.06.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குச்சம் ஒழுங்கை,**
**வல்வெட்டித்துறை.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
19
11
1937

மறைவு
06
06
2023

## திரு. குமாரவேலு விசயரட்ணம்

(ரட்ணம் பாமசி & Groceries, Ratnam Filling Station)

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்திற்கு எமது

ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு,

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய

இறைவனைப் பிரார்த்திக்கும்

**பொன்னம்பலம் சிவஞானசுந்தரம் குடும்பம்.**

**வாரிவளவு, காரைநகர்**

Pettah Google Limited
NO - 124, DAM STREET, COLOMBO - 12
KINGFISHER
NO - 111 & 113, OLD MOOR STREET, COLOMBO 12
TV ONE
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாவட்ட பொது வைத்தியசாலை - வவுனியா
## பெறுகை அறிவித்தல்கள் - 2023

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் 2023 இரண்டாம் அரை ஆண்டிற்குரிய காகிதாதி பொருட்கள். சுத்திகரிப்பு பொருட்கள் மற்றும் ஏனைய அலுவலக பாவனை பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | விபரம் | கேள்வி இல | விலை மனுப்பிணைத் தொகை |
|---|---|---|---|
| 01. | காகிதாதி பொருட்கள் (Stationery Items) கொள்வனவு செய்தல் | NP/04/43/DGHV /03/ NCB/LP/St/2023-01 | 20,000.00 |
| 02. | சுத்திகரிப்பு மற்றும் அலுவலக பாவனைப் பொருட்கள் (Cleaning Items & Consumable Items) கொள்வனவு செய்தல் | NP/04/43/DGHV /03/ NCB/LP/Cl/2023-02 | 20,000.00 |

1. மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக பெறுகை விண்ணப்பங்களுக்கு ரூபா 2.000.00 இனை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையின் நிதிப்பிரிவில் காசாக செலுத்திப் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள வேண்டும். (நிறுவன கடிதத்தலைப்பில் கோரிக்கை கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்)
2. பெறுகை விண்ணப்பம் கோரும் நிறுவனங்கள் குறித்த சேவையினை வழங்குவதற்கான வியாபார பெயர்ப்பதிவினை கொண்டிருத்தல் வேண்டும்.
3. பெறுகை ஆவணங்களை 08.06.2023 தொடக்கம் 21.06.2023 ம் திகதி வரை அலுவலக நாட்களில் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 03.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
4. பெறுகை விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும்போது 21.09.2023 ம் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய வகையில் ரூபா 20.000.00 பெறுமதியில் விலை மனுப்பிணையினை (Bid Security Bond) அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றினூடாகப்பெற்று கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. சகல பெறுகை ஆவணங்களும் **"பணிப்பாளர், பிராந்திய பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, கண்டி வீதி, வவுனியா"** என்ற முகவரிக்கு அனுப்பப்படுவதுடன் (நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலமாக) கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் உரிய சேவைகளை குறிப்பிடல் வேண்டும்.
   - காகிதாதி பொருட்கள் (Stationery Items) கொள்வனவு செய்தல்
   - சுத்திகரிப்பு மற்றும் அலுவலக பாவனைப் பொருட்கள் (Cleaning Items & Consumable Items) கொள்வனவு செய்தல்
6. சகல முத்திரையிடப்பட்ட பெறுகைகளும் 22.06.2023ம் திகதி வியாழக்கிழமை காலை 10.30 மணி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
7. பெறுகை நேரம் முடிவடைந்தவுடன் அன்றையதினமே (22.06.2023) உடனடியாக 10.31 மணிக்கு பெறுகை விண்ணப்பங்கள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரம் விண்ணப்பதாரரோ அல்லது எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
8. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் நேரடியாகவோ அல்லது 024-2228094 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளலாம்.
9. பெறுகை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளுக்கும் பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதியாகும்.

Dr. J.M.**நிலக்ஷன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை, வவுனியா.**
**024-2228094,** Fax: **024-2222262.** Email: acctghv@gmail.com

(CR/39989) AH-1

## மரண அறிவித்தல்



மண்ணில் 13 . 08 . 1939

விண்ணில் 06 . 06 . 2023

## சின்னையா வாமதேவன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், இளவாலை, மயிலிட்டியை வசிப்பிடமாகவும், சிறுவிளான் இளவாலையை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா வாமதேவன் நேற்றுமுன்தினம் (06.06.2023) செவ்வாய்க் கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், நவநீதன், நவநிதி, நவஜோதி, நவக்குமாரன், நவசீலன், நவரஞ்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவபாக்கியம், காலஞ்சென்ற நாகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராஜி, புஸ்பராஜா, சந்திரன், சந்திரலோஜினி, கலைவாணி, கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெனிபா, டினோஜன், சரண்ஜன், சந்துசன், சஜிந்தன், கரிணி, சபிக்சன், லுபிக்சன், டபிலான், துசாணா, புவிசான், நிகானா, கேசியா, நவீஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் அடக்கம் செய்வதற்காக மணற்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**சிறுவிளான், இளவாலை.** (CS 50732) AH-1 **குடும்பத்தினர்.**

**077 714 5261, 077 435 3788**

## வீடு விற்பனைக்கு

காளி கோவிலடி, கோண்டாவில் மேற்கில் 2 பரப்புக் காணியில் அமைந்துள்ள 03 அறை, சமையலறை மற்றும் வரவேற்பறையுடன் கூடிய விஸ்தீரணம் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.

**077 072 9698**

(CS/50738)AH-1

## விற்பனைக்கு

நல்ல இன டோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.

**வி.கபிலன் - 077 064 1113**
**இல.160, மானிப்பாய் வீதி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

(CS/50640)AH-1

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## கந்தையா மகேந்திரராசா

(ஓய்வுபெற்ற பிரதேசசபை நிர்வாக உத்தியோகத்தர் – பூநகரி, முகமாலை, கரைச்சி)

மண்ணில் 06.03.1947

விண்ணில் 11.05.2023

கடந்த 11.05.2023 அன்று சிவபதம் அடைந்த எம் குடும்பத் தலைவர் கந்தையா மகேந்திரராசா (ஓய்வுபெற்ற பிரதேச சபை நிர்வாக உத்தியோகத்தர் – பூநகரி, கரைச்சி, முகமாலை) அவர்களின் இறுதி நிகழ்வில் கலந்து அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், சக உத்தியோகத்தர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும், வெளிநாடுகளில் இருந்து எமது துயரில் பங்கு கொண்டோருக்கும், தொலைபேசி மூலம் இரங்கல் செய்தி வழங்கியவர்களுக்கும், கிளி. வைத்தியசாலை சமூகத்துக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் எதிர்வரும் (10.06.2023) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்வதுடன் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(CS/50746)AH-1

72 C/1, கானான் சேர்ச் லேன்,
கனகாம்பிகை குளம், கிளிநொச்சி.

**குடும்பத்தினர்.**

## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

01. தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய், அவர்கள் தகுதி வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு கோருகின்றார்.
02. இவ்விலை மனுக்கோரலானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. இக்கேள்வியானது பொருத்தமான வியாபார அல்லது கம்பனிப்பதிவுகளை கொண்டுள்ளதும், கறுப்புப் பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப்படாததுமான கேள்விதாரருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.
04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரியில் 2023.06.08ம் திகதி தொடக்கம் 2023.06.21ம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப 09.00 தொடக்கம் பி.ப 03.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1,000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வியை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதி, நகல்பிரதி என தனித்தனி உறைகளிட்டு தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு 2023.06.22 அன்று பி.ப 2.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
06. கேள்வி தொடர்பான இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் பெறுகைக்குழுவிற்கே உரியது.

| இல | கேள்வி எண் | விபரம் | தேவைப்படும் எண்ணிக்கை | பொருள் வழங்கப்பட வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| 01 | NP/14/41(16)/2/P/SP/2022 | சிவப்பு பச்சை அரிசி | 1932 Kg | கொள்வனவுக் கட்டளை வழங்கிய நாளிலிருந்து 15நாட்கள் |
| 02 | | உழுந்து | 966 Kg | |
| 03 | | கடலை | 644 Kg | |
| 04 | | பயறு | 161 Kg | |

தலைவர்
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்
2023.06.08

(CR/39994)AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 20.11.1953

## இராமலிங்கம் இராஜேந்திரன் (சம்பந்தன்)

(உரிமையாளர்-Leading crusher works KRR Engg(Pvt)Ltd, Nelu water (Pvt)Ltd)

இறப்பு 06.06.2023



வேலணை 1ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் இராஜேந்திரன் 06.06.2023 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் - பாக்கியலட்சுமி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற நாகராசா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராசமலரின் அன்புக் கணவரும், லிதுர்ஷனின் பாசமிகு தந்தையும், ஹிந்துஜா லிதுர்சனின் மாமனாரும், காலஞ்சென்ற மகேந்திரன், காலஞ்சென்ற மணிவாசகம், கலைமகள், ஶ்ரீதேவி, காலஞ்சென்ற இராஜசுலோசனா, இந்திரலதா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், இந்திராணி, பத்மாதேவி, சிவராஜா, காலஞ் சென்ற கோபாலபிள்ளை, கந்தையா, ரவி, இராசரத்தினம், இராஜலிங்கம், இராசேந்திரம், இராஜசிங்கம், இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், துஷ்யந்தி, துஷ்யந்தன், கிருஷ்யந்தன், பிரியந்தன், அரவிந்தி, ஆனந்தி, பிரியந்தி, தயானி, கிரிஷானி, துவாரகன், சதுர்ஷன், தர்சினி, வித்தியாயினி, சுகிர்தா, பிருந்தாபன், பிரசன்னா, பிரியதர்சன், பிரசாந்தி, கிருஷாந்தி, நர்மிலா, நர்வீன், மதுராந்தகன், மதுசாரங்கன், கஜானன், கஜநீதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், ரவீந்திரா, சுஜீ, லோஜி, கவிதா, மணிவண்ணன், இராமகிருஸ்ணன், சாய்கீதா, வாகீசன் ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.06.2023 வெள்ளிக்கிழமை மதியம் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.19B, 5ஆம் ஒழுங்கை, கதிரேசு வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியா.

Tel:077 372 7316

தகவல்: குடும்பத்தினர்.

(CS 25164)A-1

# மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 07 . 1932



இறப்பு 07 . 06 . 2023

## சின்னட்டிப்பிள்ளை தம்பிராஜா

(உரிமையாளர்: ராஜா மெடிக்கல் ஸ்ரோர்ஸ், K.K.S. றோட் சுன்னாகம்)

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் சுன்னாகம் ராஜா மெடிக்கல் உரிமையாளரும், தற்போது இல.74, ஜெயந்திநகர், கிளிநொச்சியில் வசித்து வந்தவருமான சின்னட்டிப்பிள்ளை தம்பிராஜா அவர்கள் நேற்று (07.06.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னட்டிப்பிள்ளை சின்னப்பிள்ளை அவர்களின் மகனும், படவீரசிங்கம் பொன்னம்மா அவர்களின் மருமகனும், பாக்கியத்தின் அன்புக்கணவரும், விசாஜினி (கனடா), சசிகலா (சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஶ்ரீமோகன், தயாபாலன் ஆகியோரின் மாமனாரும், சாரங்கி, அட்சயனின் பேரனும், அமரர் நாராயணபிள்ளை, சரஸ்வதி, பசுபதி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2023) வியாழக்கிழமை இல.74, ஜெயந்திநகர் கிளிநொச்சியிலுள்ள தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.74, ஜெயந்திநகர்,
கிளிநொச்சி

தகவல் :
நகுலேஸ்வரன் (நவம்-பெறாமகன்)

# மரண அறிவித்தல்

மலர்வு 10 . 04 . 1946



உதிர்வு 04 . 06 . 2023

## வீரசிங்கம் கோபாலசிங்கம்

யாழ் மாதகல் அந்தோனியார் வீதியை பிறப்பிடமாகவும் வதிரி மாலுசந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் கோபாலசிங்கம் 04.06.2023 ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வீரசிங்கம் சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு புதல்வனும் சிவப்பிரகாசம் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் சந்திராதேவியின் அன்புக் கணவரும், கிருஷ்ணகுமார் (கனடா), லோகேஸ்வரி (கனடா), கணேஷ குமார் (கனடா), காலஞ்சென்ற மயூரதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சோபா, சாமினியின் அன்பு மாமனாரும் அஜீஸ், ஜெயன், மயூர் ஆகியோரின் அப்பப்பாவும் காலஞ்சென்ற கைலாசபதி, பேரின்பநாதன், தர்மேந்திரன் மற்றும் நாகேஸ்வரிதேவி (கனடா), சறோஜாதேவி, சோமசேகரம் (கனடா) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற கருணானந்தராஜா, பவானந்தன் மற்றும் நிரஞ்சலா வசந்தகுமாரி, சந்திரகுமார், நித்தியானந்தராஜா சாந்தினி, ராஜேஸ்வரன், புஷ்பராணிஆகியோரின் மைத்துனரும் சுதர்சன் , சண்டிகா, ஜனார்த்தனன், பார்த்திபன், கோபிகா, சுபராஜ், தாரணி, சிவானி, நிதர்ஷினி, சாயினி ஆகியோரின் மாமனாரும் கிருஸ்ணவி, பிரணவி, ஷாலினி, சாதனா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.06.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் வதிரி ஆலங்கட்டை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லோகேஸ்வரி (மகள்) 0740343282
கிருஷ்ணகுமார் (மகன் ) 416-9372008
கணேசகுமார் (மகன் ) 416-4975675

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



கடந்த 10.05.2023 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## அமரர் நாகலிங்கம் சுப்பிரமணியம்

அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் நேரிலும் தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் இரங்கல்களை தெரிவித்து துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் குடும்பத்தினர் சார்பில் நன்றியைத் தெரிவிப்பதுடன் நாளை (09.06.2023) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**'பழைய கோட்டை'**
**கோப்பாய் வடக்கு,**
**கோப்பாய்.**

**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

**பிறப்பு** 08 . 12 . 1961



**இறப்பு** 06 . 06 . 2023

## இராமநாதன் ஸ்ரீரஞ்சன்

யாழ்ப்பாணம் நல்லூரடியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் ஸ்ரீரஞ்சன் அவர்கள் நேற்றுமுன்தினம் (06.06.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி இராமநாதன் சரஷ்வதி அவர்களின் கனிஷ்ட புதல்வனும், திரு. தனபாலசிங்கம் மற்றும் காலஞ்சென்ற திருமதி புஷ்பராணி அவர்களின் மருமகனும், திருமதி ரஞ்சிதமலர் ஸ்ரீரஞ்சன் (ஜேர்மனி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நிர்மலாதேவி தில்லைநாதன், இந்திராதேவி, சிவானந்தன் (கனடா), சச்சிதானந்தன் (ஜேர்மனி), கிருபானந்தன் ஆகியோரின் அருமைத் தம்பியும்.மேலும் திருநெல்வேலி இந்து வாலிப சங்கத்தின் மூத்த உறுப்பினருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2023) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு 429/19, கோவில் வீதி, நல்லூரில் (கந்தன் கருணைக்கு அருகில்) அன்னாரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு யாழ். செம்மணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**இ.கிருபானந்தன் (சகோதரன்) 0711776376**
**த.வினாயகதாசன் (மைத்துனர்) 0770764638**
**இ.சச்சிதானந்தன் (சகோதரன்-ஜேர்மனி) 004961046003616**

### எம்.பிக்களுக்கும்...

பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

2024 ஜனவரி முதலாம் திகதி முதல் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் வரிக்கோவை திறக்கப்படவுள்ளது. இந்தநிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் வருமான வரி செலுத்துவோர் பட்டியலில் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். (எ-6)

### இடைக்கால...

கே.விக்னேஸ்வரனும் பங்கேற்கவுள்ளார்.

இந்த வரைவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட், ஈ.பி.டி.பி. போன்ற கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன. அண்மையில் ஜனாதிபதியுடன் தமிழ்க் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்த போது, இந்த வரைவு தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆயினும் அதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடியோடு மறுப்புத் தெரிவித்திருந்தனர். இந்தநிலையில் சி.வி.விக்னேஸ்வரனும், பிரதமரும் இந்த வரைவு தொடர்பில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். (எ-இ)

# பெயர் மாற்றம்

161ஆம் கட்டை, கண்டி வீதி, பரந்தன், கிளிநொச்சியில் வசிக்கும் **சின்னக்கன்னு மனைகுமாரி** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை **சின்னக்கன்னு நளினகுமாரி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **சின்னக்கன்னு நளினகுமாரி** என்றே கையொப்பமிட்டு பயன்படுத்துவேன் என இலங்கை சோசலிச குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

**தகவல்:- சின்னக்கன்னு நளினகுமாரி**

# விடுதிக் காப்பாளர் தேவை

திருக்கேதீச்சரத்தில் (மன்னார்) அமைந்துள்ள சிவனருள் இல்லத்துக்குப் பிள்ளைகளைப் பராமரிக்க காப்பாளர்கள் (ஆண், பெண்) தேவை. உங்கள் சுயவிபரத்துடன் விண்ணப்பிக்கவும். அல்லது தொடர்பு கொள்ளவும். **(077 581 5998)**

**முகவரி:**
**பணிப்பாளர்,**
**சிவனருள் இல்லம், திருக்கேதீச்சரம்.**

CR/39990/AH-1

# வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம் மகோற்சவம்-2023

மேற்படி ஆலயத்தின் மகோற்சவம் 09.06.2023 அன்று ஆரம்பமாகவுள்ளது. குறித்த மகோற்சவத்தை நடத்தும் உரிமையை நா. சிவதர்சக்குருக்கள், நா. ஹரிதர்சஜயர் மற்றும் நா. சந்திரகுமாரி ஆகியோரிற்கு ந.சொ./63/2023 எனும் வழக்கில் கௌரவ யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் தனது 06.06.2023 கட்டளை மூலமாக வழங்கியுள்ளது. எனவே மகோற்சவ உபயகாரர்கள் தமது உபயம் தொடர்பில் நா. சிவதர்சக்குருக்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். குறித்த மன்றினால் வழங்கப்பட்ட கட்டாணையை மீறுவோருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு தொடர நாம் எமது சட்டத்தரணிக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

**நா. சந்திரகுமாரி**
**நா. சிவதர்சக்குருக்கள், நா. ஹரிதர்சஜயர்**

# மரண அறிவித்தல்

## தம்பையா தர்மலிங்கம்

**(லக்ஷ்மி நாராயணா லொறி உரிமையாளர்)**



நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும் நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா தர்மலிங்கம் நேற்று (07.06.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா செல்லம்மா தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற அப்புத்துரை இராசம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற வசந்தமாலாவின் அன்புக் கணவரும், கௌரி, லிங்கேஸ்வரன், விக்கினேஸ்வரன், கமலேஸ்வரி, கமலேஸ்வரன், குமார், நளினி ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரன், தனுசா, சாந்தினி, புஸ்பாகரன், செங்கீரன் ஆகியோரின் மாமனாரும், மயூறி, குகன், சதிஸ், தர்மினி, திவாகர், தனுஸ், திரிசா, தாமிரன், பவித்திரா, பவிதா, பவிதரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.06.2023) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் மூத்த மகள் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி வடக்கு சீயாக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கௌரி (மகள்)- 0776872885**
**குமார் (மகன்)- 0777872944**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஜேந்திரகுமார்...

அவர் நேற்று மாலை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில், 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

**முரண்பாடு**

கடந்த 2ஆம் திகதி வடமராட்சி கிழக்கு, தாளையடியில் நாடாளுமன்ற கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்துகொண்ட சந்திப்பு ஒன்றில் தம்மை அடையாளப்படுத்தாத இருவர் புகைப்படம் எடுத்ததை அடுத்து அவர்களுடன் முரண்பாடு ஏற்பட்டது. அதன்பின்னர் அருகில் இருந்த பரீட்சை நிலையத்தில் கடமையில் இருந்த பொலிஸாரும் அந்த இடத்துக்கு வந்ததை அடுத்து அங்கு குழப்ப நிலைமை ஏற்பட்டது. பொலிஸாரும், பொலிஸ் புலனாய்வாளர்கள் என்று அறிமுகப்படுத்தியவர்களும் தங்களைத் தாக்கினர் என்றும், துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தினர் என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தெரிவித்தனர். அதே நேரம் பொலிஸாரின் கடமைக்கு இடையூறாகச் செயற்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்படச் சிலரைக் குற்றவாளிகளாகப் பெயரிட்டனர். அவர்களின் இருவர் மருதங்கேணிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வாக்குமூலம் வழங்க மருதங்கேணிப் பொலிஸாரால் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்ளவுள்ளதால் எதிர்வரும் திங்கட்கிழமை வாக்குமூலம் வழங்கச் சம்மதித்திருந்தார். இது தொடர்பாக பிரதி சபாநாயகருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரியப்படுத்தியிருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்காகக் கொழும்பு சென்றிருந்த நிலையில், திடீரென 8 ஆம் திகதி (நாளை) வாக்குமூலம் வழங்க சமுகமளிக்கவேண்டும் என்று கொழும்பு பொலிஸாரின் உதவியுடன் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**கைது**

நேற்றுக்காலை கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைக் கைது செய்வதற்காக அவரது வீட்டுக்குச் சென்றுள்ளனர். "வாக்குமூலம் பெறுவதற்கு கைது செய்து கொண்டு செல்ல வந்துள்ளார்கள். சபாநாயகரிடம் இந்த விடயம் தொடர்பில் நான் 6.6.2023 அன்று கடிதம் கொடுத்துள்ளேன். அதை கொள்ளுப்பிட்டி பொலிஸாரிடமும் தெரிவித்தேன். தங்களுக்கு எந்த அறிவித்தலும் வரவில்லை என்று சொன்னார்கள்.

சற்று முன்னர் சபாநாயகர் என்னை தொடர்பு கொண்டார். நான் விடயத்தை தெளிவுபடுத்தினேன். எதிர்வரும் திங்கட்கிழமை 12.06.2023 அன்று வாக்குமூலம் அளிப்பேன் என்றும் சபாநாயகருக்கு தெரிவித்தேன். அவரும் அதை ஏற்றுக்கொண்டார். சபை அமர்வில் கலந்துகொள்ளலாம் என்று சொன்னார். இதை பொலிஸ்மா அதிபர் ஊடாக கொள்ளுப்பிட்டி பொலிஸாருக்கு தெரியப்படுத்துமாறு சபாநாயகரிடம் கேட்டுக் கொண்டேன். உடனடியாக பொலிஸ்மா அதிபரை தொடர்பு கொள்வதாக சபாநாயகர் என்னிடம் கூறினார். இனி இவர்கள் என்னைக் கைது செய்தால் அது சட்ட விரோதம்தான்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைதுக்கு முன்னர் தெரிவித்தார்.

**பிணை**

நாடாளுமன்ற உறுப்பினருக்குரிய சிறப்புரிமைகளை நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியபோதும், அவற்றைக் கருத்தில் எடுக்க மறுத்த பொலிஸார் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரைக் கைது செய்து தங்களது வாகனத்தில் ஏற்றினார்கள். அங்கிருந்து பொலிஸ் வாகனம் மூலம் நேற்று மாலை கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொண்டுவரப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரைப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

நேற்று நாடாளுமன்ற அமர்வு நடைபெற்றபோதும், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அதில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை. நாடாளுமன்றத்தில் நேற்று அவர் சிறப்புரிமை பிரச்சினையை எழுப்புவதற்குரிய ஆயத்தங்களை மேற்கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-எ-26)

## விபத்தில்...

இளைஞர் ஒருவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

வவுனியா, ஓமந்தையைச் சேர்ந்த சிவானந்தன் அனுசன் (வயது-29) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

கடந்த 26ஆம் திகதி ஓமந்தையில் இருந்து வவுனியாவுக்கு மோட்டார் சைக்கிளில் பயணித்தபோது, முன்னே பயணித்த சைக்கிளுடன் மோதி இவர் விபத்துக்குள்ளாகியிருந்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இவர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்றுக்காலை அவர் உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-எ-26)

## கிளிநொச்சி,...

அவரை எழுப்ப முயற்சித்துள்ளார். எனினும் வயோதிபர் அசைவற்றுக் காணப்பட்டதால் அது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டபோது வயோதிபர் உயிரிழந்திருந்தமை தெரிய வந்துள்ளது. சம்பவ இடத்துக்குச் சென்று பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை முன்னெடுத்தார்.

உடலை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைத்து, உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு அவர் பொலிஸாருக்கு பணித்துள்ளார்.

அதேவேளை, கிளிநொச்சி செல்வாநகரிலுள்ள புதுக்குளத்தில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சடலத்தை மீட்டனர். செல்வாநகரைச் சேர்ந்த வெள்ளைக்கண்ணு குணசேகரம் (வயது-53) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் கிளிநொச்சி பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ-எ-26,113)

## நகைகள்...

ளார். நேற்று நண்பகல் வீடொன்றிலிருந்து 5 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என்று பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் 2 மணி நேரத்தில் சந்தேகநபரைக் கைது செய்ததுடன், நகைகளையும் மீட்டுள்ளனர்.

சந்தேகநபர் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (அ-எ-26)

## தமிழ்...

குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மட்டத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது. பொலிஸார் நடந்துகொண்ட முறையை தனிப்பட்ட முறையில் எனக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கையாக நான் பார்க்கவில்லை. அடக்குமுறைக்குள் உள்ள தமிழ் மக்களின் நிலையை உலகுக்கு எடுத்துக்காட்டும் சம்பவமாகவே இதைப் பார்க்கின்றேன்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நேற்று மாலை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த விடயத்தில் பொலிஸ் தரப்பு மீதும் குற்றச்சாட்டுள்ளது. பொலிஸார் மீதான குற்றச்சாட்டை விசாரணை செய்வதும் பொலிஸாரே. அவர்கள் இந்த விடயத்தில் கவனமாக நடுநிலைமையாகச் செயற்படவேண்டும். ஆனால், என்னிடம் வாக்குமூலம் பெறுவதற்கு முன்னதாகவே பொலிஸ் தரப்பை நியாயப்படுத்தும் வகையிலேயே அவர்களின் உத்தியோகபூர்வமான கருத்துக்கள் ஊடகங்கள் ஊடாக வெளியாகியுள்ளன. இவ்வாறான பின்னணியில் பொலிஸார் எனக்கு நீதியைப் பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையை நான் முற்றுமுழுதாக இழந்திருக்கின்றேன். இந்த விடயங்களை நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்தோம். அவர் அவற்றை உள்வாங்கியதோடு, பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பாகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார். பொலிஸார் தொடர்பான விசாரணைகள் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நீதிமன்று உத்தரவிட்டுள்ளதுடன், அந்த விசாரணையில் சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மட்டத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டி நேரிடும் என்றும் சுட்டிக்காட்டியது.

பொலிஸாரின் செயற்பாடுகளில் நம்பிக்கை கொள்ளமுடியாது என்று தெரிவித்த நாம், இந்த விசாரணைகள் நீதிவானின் நேர்பார்வையில் நடைபெற வேண்டும் என்று கோரினோம். எனக்கு விதிக்கப்பட்டிருந்த பயணத் தடை நீதிமன்றத்தால் நீக்கப்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதி என்ற வகையில் எனது கடமைகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் விசாரணைகள் நடைபெறவேண்டும் என்றும் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது - என்றார். (அ-எ-26)

## பொலிஸாரின்...

நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்த முடியாது - இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன.

நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்பதற்குக் கஜேந்திரகுமார் எம்.பியின் சிறப்புரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் நேற்று ஆற்றிய உரைக்குப் பதிலளிக்கும் போதே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் விவகாரம் தொடர்பாக உயர் பொலிஸ் அதிகாரிகள் எனக்குத் தெரியப்படுத்தினர். கைது நடவடிக்கை தொடர்பாகவும் எனக்குத் தெளிவுபடுத்தப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினருக்குச் சபை அமர்வில் பங்கேற்கவுள்ள சிறப்புரிமையைத் தடுக்க முடியாது என நான் சுட்டிக்காட்டினேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொலிஸார், பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் இன்று (நேற்று) காலையும் எனக்கு அழைப்பை எடுத்தனர். நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரை கிளிநொச்சி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய பின்னர், அவரை நாடாளுமன்றம் கொண்டு வந்து விடுவோம் என்று பொலிஸார் தெரிவித்தனர். இதுதான் பொலிஸாரின் திட்டம்.

பொலிஸாரின் கடமைக்கு இடையூறு ஏற்படுத்த முடியாது. கைது செய்யப்பட்ட பின்னர் அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த வேண்டியது பொலிஸாரின் பொறுப்பு ஆகும் - என்றார். (அ-எ-22)

## ம.உ....

தர்கள் நேற்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தில் வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் வாக்குமூலம் பெறுவதற்காக நேற்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களிடம் நேற்றுச் சுமார் 4 மணி நேரம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. அதேவேளை மேலும் இரு பொலிஸாரிடம் வாக்குமூலம் பெறப்படவுள்ளது என்றும், அவர்கள் தற்போது பரீட்சை நிலைய பாதுகாப்புக் கடமையில் உள்ளதால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு வாக்குமூலம் வழங்க அழைக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலக இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார். (அ-எ-26,20)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

## பொதுக்கூட்டம்

ஊர்காவற்றுறை ஆதார மருத்துவ மனை நோயாளர் நலன்புரி சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் நாளைமறுதினம் 10ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மருத்துவமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (ச)


## TECHNO WORLD

### தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்

**A / L தொழில்நுட்ப பிரிவு**

புதிய கல்வியாண்டு

**A/L 2025**

- திகதி - 11.06.2023 (ஞாயிற்றுக்கிழமை)
- நேரம் - காலை - 8.30

(தேசிய, மாவட்ட ரீதியில் 5 ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழகதெரிவு)

தொடர்புகளுக்கு: **077 017 5346**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு.

* பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் வீதியில்.
* புத்தூர் பிரதான தண்ணீர் தாங்கி அருகாமையில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில், 18 அடி பாதையுடன்.
* ஒரு பரப்பின் விலை 120,000/= மட்டும்.

தொடர்பு: **076 733 6047, 076 7558 606.**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 25 பரப்புக் காணி விற்பனைக்கு.

* கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 1/2 km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200 m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி).
* கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் (250,000/=) மட்டும்.

தொடர்பு: **076 911 9371, 076 4365 814**

## NEW SCIENCE WORLD

NEW SCIENCE WORLD — VICTORY MUST

### கணித - விஞ்ஞானப் பிரிவுகள்

**A/L 2025 Batch**

**Tamil And English Medium**

**Zoom** இன் ஊடான இணையவழி வகுப்புக்கள் மற்றும் நேரடி வகுப்புக்கள்.

| | | |
|---|---|---|
| பௌதிகவியல் | - | திரு. R.குமரன்<br>திரு. R.குகன் |
| இரசாயனவியல் | - | திரு. டயஸ்<br>திரு. K.T.சிவகுமார் |
| உயிரியல் | - | திரு. N.T.கஜேந்திரன் |
| இணை.கணிதம் | - | திரு. S.S.செந்தில்ராஜ்<br>திரு. G.V.ஹரிகரன் |
| ICT | - | திரு. T.லவேந்திரன் |

அனுமதிகளை 09.06.2023 அன்று காலை 5.20 மணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

ஆரம்பம் :- 14.06.2023 புதன்கிழமை

நேரம் : 8.00 a.m

மேலதிக விபரங்களுக்கு :-

**077 336 4030, 021 221 6690, 077 336 4055, 075 836 4055**

**New Science World**

**Navalar Road, Brown Road Junction, Jaffna.**

## NEW SCIENCE HALL

NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD, JAFFNA.

### நேரடி வகுப்புக்கள்

**2025 A/L**

கணித, உயிரியல் பிரிவுகள்

#### தமிழ்மொழி மூலம்

**PHYSICS**
- திரு. G.பிரபா
- திரு. N.கபிலன்
- திரு. R.ராகுலன்

**COM.MATHS**
- திரு. P.செந்தில்நாதன்
- திரு. S.சிவகரன்

**CHEMISTRY**
- திரு. G.BENO
- திரு. T.சுசாந்தன்
- திரு. V.K.நந்தா

**AGRICULTURE**
- திரு. K.அரசிளங்குமரன்

**BIOLOGY**
- திரு. V.S.குணசீலன்
- திரு. K.இராகவன்

**ICT**
- திரு. K.கேதீஸ்வரன்

#### ENGLISH MEDIUM

**PHYSICS**
- MR.M.KUGANESWARAN
- MR.R.RAAKULAN

**CHEMISTRY**
- MR.G.BENO

**BIOLOGY**
- MR.V.S.GUNASEELAN

**COM.MATHS**
- MR.P.SENTHILNATHAN
- MR.S. SIVAKARAN

அனுமதிகள் வழங்கப்படுகின்றன

**ஆரம்பம் - 10.06.2023 Saturday 8.00 AM**

நிகழ்நிலை வகுப்புகளும் நடைபெறும்

சகல மாவட்டங்களிலும் இருந்து இணைந்து கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: 0765693006, 0765663006, 0777917611

http://facebook.com/ NEW SCIENCE HALL, JAFFNA


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 08.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.